## இலங்கைச் சுற்றுலாவின் உயரிய அமைப்பான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துங்கள்

### இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) என்பது சுற்றுலா மற்றும் தொடர்புடைய தொழில்களின் திட்டமிடல், அபிவிருத்தி, ஒழுங்குபடுத்தல் மற்றும் கொள்கை அமுலாக்கம் ஆகியவற்றிற்குப் பொறுப்பான அரசாங்க அதிகாரசபை ஆகும். சுற்றுலாத் துறை, எதிர்காலத்தில் தேசியப் பொருளாதாரத்திற்கு ஒரு முக்கியமான பங்களிப்பாளராக அடையாளம் காணப்பட்டுள்ளது. இத்துறை நாட்டிற்கு அதிகளவான நேரடி வெளிநாட்டு முதலீடுகளையும் உயர்மட்ட முதலீட்டாளர் திட்டங்களையும் ஈர்க்கின்றது.

அதிகாரசபையில் தற்போதுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | புதவி | வகை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | உதவிப் பணிப்பாளர்/ சுற்றுலா அபிவிருத்தி | MM 1-2 | 04 |
| 02. | உதவிப் பணிப்பாளர் / சட்டம் | MM 1-2 | 01 |
| 03. | உதவிப் பணிப்பாளர / நிதி முகாமைத்துவம் | MM 1-2 | 02 |
| 04. | இளநிலை முகாமையாளர்/ சுற்றுலா அபிவிருத்தி | JM 1-2 | 02 |
| 05. | இளநிலை முகாமையாளர்/ Web Presence | JM 1-2 | 01 |
| 06. | விசாரணை அதிகாரி | MA 5-2 | 02 |
| 07. | முகாமைத்துவ உதவியாளர் | MA 1-2 | 10 |

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் :

- தேவையான தகுதிகள் உட்பட விரிவான வெற்றிட அறிவிப்பு SLTDA இணையதளத்தில் உள்ளது *Careers* – http://www.sltda.gov.lk/en/careers.
- விண்ணப்பதாரர்கள் அதே இணையப் பக்கத்தில் குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்ய வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் பதவியின் கடமைகளைத் திறமையாக மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் மன ரீதியான தகுதியைப் பெற்றிருக்க வேண்டியதுடன் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, கல்வி, தொழில்சார் மற்றும் தொழிற்சார் தகுதிகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள், அனுபவத்திற்கான ஆதாரத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் (referees) தொடர்பு விவரங்கள் ஆகியவற்றுடன், 22.01.2026 அன்று அல்லது அதற்கு முன்னர், பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்:

தலைவர்,
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,
இல. 80, காலி வீதி, கொழும்பு 03

விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தயவுசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

- தற்போது, அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது நியதிச் சட்ட சபைகளில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை குறித்த திணைக்களத் தலைவர்கள் ஊடாகவே சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்கூறிய தேவைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். குறைந்தபட்சத் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களைச் சுருக்கிப்பட்டியலிடுவதற்கு முகாமைத்துவத்திற்கு உரிமை உண்டு. எந்த முறையிலும் சிபாரிசு பெறுவது ஒரு தகுதியிழப்பாகக் கருதப்படும்.

**ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்பு**

தெரிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 10% பங்களித்தல் வேண்டும். அதேவேளை அதிகாரசபை, 15% பங்களிப்பைச் செய்வதுடன் இதற்கு மேலதிகமாக, ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% செலுத்தப்படும்.

**சம்பளம்**

இப்பதவிக்குரிய சம்பளம், 2025.04.01 ஆம் திகதியிலிருந்து அமுலான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருப இல. 01/2025 இன் படி வழங்கப்படும்.

பதவியிடங்களை நிரப்புதல் மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பாக அதிகாரசபை எடுக்கும் தீர்மானங்கள் இறுதியான தீர்மானங்களாகும்.

**தலைவர்,**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,**
**80, காலி வீதி,**
**கொழும்பு 03.**

**வெளியிடப்பட்ட திகதி: 08.01.2026**

## இலங்கைச் சுற்றுலாவின் உயரிய அமைப்பான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துங்கள்

**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) என்பது சுற்றுலா மற்றும் தொடர்புடைய தொழில்களின் திட்டமிடல், அபிவிருத்தி, ஒழுங்குபடுத்தல் மற்றும் கொள்கை அமுலாக்கம் ஆகியவற்றிற்குப் பொறுப்பான அரசாங்க அதிகாரசபை ஆகும். சுற்றுலாத் துறை, எதிர்காலத்தில் தேசியப் பொருளாதாரத்திற்கு ஒரு முக்கியமான பங்களிப்பாளராக அடையாளம் காணப்பட்டுள்ளது. இத்துறை நாட்டிற்கு அதிகளவான நேரடி வெளிநாட்டு முதலீடுகளையும் உயர்மட்ட முதலீட்டாளர் திட்டங்களையும் ஈர்க்கின்றது.

அதிகாரசபையில் தற்போதுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | புதவி | வகை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | உதவிப் பணிப்பாளர்/ சுற்றுலா அபிவிருத்தி | MM 1-2 | 04 |
| 02. | உதவிப் பணிப்பாளர் / சட்டம் | MM 1-2 | 01 |
| 03. | உதவிப் பணிப்பாளர / நிதி முகாமைத்துவம் | MM 1-2 | 02 |
| 04. | இளநிலை முகாமையாளர்/ சுற்றுலா அபிவிருத்தி | JM 1-2 | 02 |
| 05. | இளநிலை முகாமையாளர்/ Web Presence | JM 1-2 | 01 |
| 06. | விசாரணை அதிகாரி | MA 5-2 | 02 |
| 07. | முகாமைத்துவ உதவியாளர் | MA 1-2 | 10 |

**1. <u>உதவிப் பணிப்பாளர்/ சுற்றுலா அபிவிருத்தி (04 வெற்றிடங்கள்)</u>**

**தகைமைகள்**

**வெளி விண்ணப்பதாரர்களுக்கு**

அ. பொறியியல், திட்டமிடல், சுற்றுலா முகாமைத்துவம், வியாபார முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், தொழில்முனைவோர் முகாமைத்துவம், கட்டிடக்கலை வடிவமைப்பு, சுற்றுச்சூழல், பொருளாதாரம் போன்ற துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பாடத்தில் இளமாணிப் பட்டம் பெற்றிருத்தல்.
அல்லது

ஆ. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, மேலே குறிப்பிடப்பட்ட துறைகள் தொடர்பான, தரம் ஏழு (Level 7) இற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழான தேசிய தொழிற் தகைமையைக் (NVQ) கொண்டிருத்தல்.

அத்துடன்

பதவிக்குத் தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு (01) வருட தகைமையின் பின்னரான அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு (கீழே கொடுக்கப்பட்டுள்ள 1 அல்லது 2)**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

2. இளநிலை முகாமையாளர் (Junior Manager - JM 1-2) தரம் II சேவைப் பிரிவில், துறையுடன் தொடர்புடைய பதவியில் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையினைப் பூர்த்தி செய்திருத்தல்.

## 2. உதவிப் பணிப்பாளர்/ சட்டத்துறை (01 வெற்றிடம்)

**தகைமைகள்**

**வெளி விண்ணப்பதாரர்களுக்கு**

அ. சட்டத்தரணியாக இருத்தல் மற்றும் உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்த ஒரு சட்டத்தரணியாக, ஐந்து (05) வருட பணி அனுபவத்தைப் பெற்றிருத்தல் அத்துடன் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் செயற்படும் ஒரு நொத்தாரிசு (Notary) ஆக இருத்தல்.

அத்துடன்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு (கீழே கொடுக்கப்பட்டுள்ள 1 அல்லது 2)**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

2. இளநிலை முகாமையாளர் (JM 1-2) தரம் II சேவைப் பிரிவில், துறையுடன் தொடர்புடைய பதவியில் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

## 3. <u>உதவிப் பணிப்பாளர்/ நிதி முகாமைத்துவம் (02 வெற்றிடங்கள்)</u>

**தகைமைகள்**

**வெளி விண்ணப்பதாரர்களுக்கு**

அ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல், வியாபார முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், வர்த்தகம், முகாமைத்துவம் ஆகிய ஏதேனும் ஒன்றில் இளமாணிப் பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

ஆ. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் சம்மேளனம் (ICASL)/ பட்டய முகாமை கணக்காளர்கள் நிறுவனம் (CIMA)/ பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் (ACCA)/ சான்றளிக்கப்பட்ட முகாமை கணக்காளர்கள் நிறுவனம் (CMA) ஆகியவற்றின் இடைநிலைத் தேர்வுகளில் (Intermediate Examinations) சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவியுடன் தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு (01) வருட பின்னைய தகைமை அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு (கீழே கொடுக்கப்பட்டுள்ள 1 அல்லது 2)**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

2. இளநிலை முகாமையாளர் - JM 1-2) தரம் II சேவைப் பிரிவில், துறையுடன் தொடர்புடைய பதவியில் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது**

35 வயதிற்குக் குறையாதிருத்தல் வேண்டியதுடன் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.)

**சம்பளம்**

MM 2-1 2025 ரூபா. 94,170/- -10xரூபா 2,480/- -15xரூபா 3,450/- ரூபா 170,720/- + (வாழ்க்கைச் செலவினப்படி)

**சலுகைகள்**

- ஊழியர் மற்றும் குடும்பத்தினரை உள்ளடக்கிய விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
- தொழில் முன்னேற்றத்திற்கான பயிற்சி
- போக்குவரத்து கொடுப்பனவு
- தொடர்பாடல் கொடுப்பனவு
- தொழில்சார் கொடுப்பனவு
- கடன் வசதிகள்

## 4. <u>இளநிலை முகாமையாளர்/ சுற்றுலா அபிவிருத்தி</u>

**தகைமைகள்**

**வெளி விண்ணப்பதாரர்களுக்கு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலாத் திட்டமிடல்/ சுற்றுலா அபிவிருத்தி/ சுற்றுலா முகாமைத்துவம்/ வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம்/ தொழில்முனைவோர் முகாமைத்துவம்/ விருந்தோம்பல் தொடர்பான துறையில் இளமாணிப் பட்டம் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு (கீழே 1 அல்லது 2)**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

அல்லது

2. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்பம் சாராத சேவைப் பிரிவில் உள்ள முகாமைத்துவ உதவியாளர் (MA 1-2) தரநிலை II இல் உள்ள பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

## 5. <u>இளநிலை முகாமையாளர்/தகவல் தொழில்நுட்பம் வலைப்பரம்பல் (Web Presence) – (01 வெற்றிடம்)</u>

**தகைமைகள்**

**வெளி விண்ணப்பதாரர்களுக்கு**

அ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் / கணினி அறிவியல் தொடர்பான பாடப்பிரிவில் இளமாணிப் பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

ஆ. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழில் கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட, தேசிய தொழில் கல்வி தகுதி (NVQ) நிலை ஏழு (7) இற்குக் குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

இ. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழில் கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட, தேசிய தொழில் கல்வி தகுதி (NVQ) நிலை ஆறு (6) இற்குக் குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம் ஒன்றில் தொடர்பான துறையில், தகுதி பெற்ற பின்னர் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

அல்லது

ஈ. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழில் கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட, தேசிய தொழில் கல்வி தகுதி (NVQ) நிலை ஆறு (6) இற்குக் குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம் ஒன்றில் தொடர்பான துறையில், தகுதி பெற்ற பின்னர் குறைந்தபட்சம் பத்து (10) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு (கீழே 1 அல்லது 2)**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

அல்லது

2. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்பம் சாராத சேவைப் பிரிவில் உள்ள முகாமைத்துவ உதவியாளர் (MA 1-2) தரநிலை II இல் உள்ள பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது**

22 வயதிற்குக் குறையாதிருத்தல் வேண்டியதுடன் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.)

**சம்பளம்**

JM 1-2 2025 ரூபா. 74,010/- -10xரூபா 1,360/- -18xரூபா 2,040/- ரூபா 124,330/- + (வாழ்க்கைச் செலவினப்படி)

**சலுகைகள்**

- ஊழியர் மற்றும் குடும்பத்தினரை உள்ளடக்கிய விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
- தொழில் முன்னேற்றத்திற்கான பயிற்சி
- போக்குவரத்து கொடுப்பனவு
- தொடர்பாடல் கொடுப்பனவு
- கடன் வசதிகள்

## 6. <u>விசாரணை அதிகாரி (02 வெற்றிடங்கள்)</u>

**தகைமைகள்**

**வெளி விண்ணப்பதாரர்களுக்கு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா மற்றும் ஹொட்டேல் முகாமைத்துவம்/ முகாமைத்துவம்/ சட்டம்/ சமூகவியல்/ விஞ்ஞானம்/ பொருளாதாரம் / கணிதம/தகவல் தொழில்நுட்பம் அல்லது பதவியுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் துறையில் இளமாணிப் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பெற்றிருத்தல்.

**வயது**

22 வயதிற்குக் குறையாதிருத்தல் வேண்டியதுடன் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

MA 5-2 – 2025 - ரூபா. 62,310/- -10xரூபா 1,360/- -15xரூபா 1,670/- - 5xரூபா 2,040/- - 111,160/- + (வாழ்க்கைச் செலவினப்படி)

**சலுகைகள்**

- ஊழியர் மற்றும் குடும்பத்தினரை உள்ளடக்கிய விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
- தொழில் முன்னேற்றத்திற்கான பயிற்சி
- போக்குவரத்து கொடுப்பனவு
- கடன் வசதிகள்

## 7. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) (10 வெற்றிடங்கள்)

**தகைமைகள்**

**வெளி விண்ணப்பதாரர்களுக்கு**

அ. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் (Credit) சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

ஆ. கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (பொதுப் பரீட்சை நீங்கலாக) சித்தி பெற்றிருத்தல்.

இ. கணினி Word Processing/தட்டச்சு அல்லது அதற்கு இணையான தகுதியுடன் மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறியை பூர்த்தி செய்திருத்தல் கூடுதல் தகுதியாகும்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு**

பின்வரும் தகுதிகளுடன் கூடிய முதன்மைத் தரத்திலான – திறன் சாரா, பகுதித் திறன் வாய்ந்த மற்றும் திறன் வாய்ந்த சேவைப் பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் விண்ணப்பிக்க முடியும்.

அ. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் (Credit) சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

ஆ. சேவையில் நிரந்தர நியமனங்கள் கொண்டிருக்க வேண்டும் மற்றும் அந்த நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்க வேண்டும்.

இ. நிரந்தர விண்ணப்பதாரர், விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் ஐந்து (05) வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**வயது**

18 வயதிற்குக் குறையாதிருத்தல் வேண்டியதுடன் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.)

**சம்பளம்**

MA 1-2 2025 - ரூபா. 46,220/- -10xரூபா 540/- -7xரூபா 630/- 12xரூபா 1,080/- -12x1,280/- ரூபா 84,350/- + (வாழ்க்கைச் செலவினப்படி)

**சலுகைகள்**

- ஊழியர் மற்றும் குடும்பத்தினரை உள்ளடக்கிய விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
- தொழில் முன்னேற்றத்திற்கான பயிற்சி
- போக்குவரத்து கொடுப்பனவு
- கடன் வசதிகள்

**தலைவர்**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**
**80, காலி வீதி**
**கொழும்பு 03.**
**வெளியிடப்பட்ட திகதி: 08.01.2026**